விருதுநகர் – மதுரை சாலையில் அமைந்துள்ள கே.வி.எஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பொருட்காட்சி மைதானத்தில் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் இணைந்து, "மரமும், மரபும்" என்ற பொருண்மையின் கீழ், நடைபெற்ற விருதுநகர் மூன்றாவது புத்தக திருவிழா 2024 னை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீப.ஜெயசீலன் தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் வி.தங்கராஜ், எஸ்.செல்வமணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், விருதுநகர் வடக்கு மாவட்ட செயலாளர் தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்துகொண்டு கழக ஆக்கப் பணிகள் குறித்தும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தங்கப் பாண்டியன், குன்னூர் சீனிவாசன், வனராஜன், சுப்புராஜ், மேயர் சங்கிதா இன்பம், தனுஷ் குமார், ராஜன், ரமேஷ், வை.மலைராஜன், மாவட்ட தி.மு.க. பொருளாளர் பிராபகரன், விருதுநகர் சேர்மன் மாதவன், அருப்புக்கோட்டை சேர்மன் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், சிவகாசி மாநகர செயலாளர் உதய சூரியன், வாரியத் தலைவர் ராஜா அருள்மொழி, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, பகுதிக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அரசியல் உலகிற்கு தெளிவான பாதையைக் காட்டியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

பிரதமரும் இதே மனப்பான்மையுடன் செயல்பட்டால் ஜனநாயக மாண்பு காக்கப்படும்!

"தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, செப். 29 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமரிடம் கோரிக்கை மனு அளித்த தின்மூலம் அரசியல் உலகிற்கு தெளிவான பாதையை காட்டியுள்ளார். பிரதமரும் இதே மனப் பான்மையுடன் தேச ஒருமைப்பாடு, மாநில வளர்ச்சி என்பதை கருத்தில் கொண்டு செயல்பட்டால் ஜனநாயக மாண்பு காக்கப் படும் என "தினகரன்" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டிற்கு அந்நிய

தினகரன்

செப்டம்பர் 28, 2024 சனிக்கிழமை

முக்கிய சந்திப்பு

தமிழ்நாட்டிற்கு அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக, முதல்வர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கா சென்று திரும்பிய கையோடு, பிரதமர் மோடியை நேற்று சந்தித்து, 50 நிமிடம் பேசியுள்ளார். தமிழ்நாடு அரசு சார்பில் 3 கோரிக்கை மனுவை நேரில் அளித்துள்ளார். இந்த சந்திப்பில் முக்கியமாக, ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின் கீழ் (சமக்ர சிக்ஷா) நிதி ஒதுக்கீடு குறித்து முதல்வர் வலியுறுத்தி உள்ளார்.

2024-25 கல்வி ஆண்டுக்காக இந்த திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ.3,586 கோடி ஒதுக்கீடு செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதில் 60 சதவீத நிதியை (ரூ.2,152 கோடி) ஒன்றிய அரசு 4 தவணைகளாக கொடுக்கும். முதல் தவணை ஜூன் மாதத்தில் வழக்கமாக விடுவிக்கப்படும். ஆனால் விடுவிக்கப்படவில்லை. இந்த நிதியை விடுவிக்க வேண்டும் என முதல்வர் தனது கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் இரண்டாம் கட்டமாக மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இத்திட்டம் தொடங்கப்படும்போது, ஒன்றிய அரசு நிதியளிக்கும்

முதலீடுகளை ஈர்ப்பதற்காக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கா சென்று திரும்பிய கையோடு, பிரதமர் மோடியை நேற்று சந்தித்து, 50 நிமிடம் பேசியுள்ளார். தமிழ்நாடு அரசு சார்பில் 3 கோரிக்கை மனுவை நேரில் அளித்துள்ளார். இந்த சந்திப்பில் முக்கியமாக, ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின்கீழ் (சமக்ர சிக்ஷா) நிதி ஒதுக்கீடு குறித்து முதல்வர் வலியுறுத்தி உள்ளார்.

2024-25 கல்வி ஆண்டுக்காக இந்த திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ.3,586 கோடி ஒதுக்கீடு செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதில் 60 சதவீத நிதியை (ரூ.2,152 கோடி) ஒன்றிய அரசு 4 தவணைகளாக கொடுக்கும். முதல் தவணை ஜூன் மாதத்தில் வழக்கமாக விடுவிக்கப்படும். ஆனால் விடுவிக்கப்படவில்லை. இந்த நிதியை விடுவிக்க வேண்டும் என முதல்வர் தனது கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் இரண்டாம் கட்டமாக மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இத்திட்டம் தொடங்கப்படும்போது, ஒன்றிய அரசு நிதியளிக்கும் என்று சொல்லப் பட்டது.

இத்திட்டத்திற்கு ரூ.63 ஆயிரம் கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த நிதியை தர ஒன்றிய அரசு மறுத்துள்ளது.

இதையும், வழங்கவேண்டும் என முதல்வர் நேரில் அழுத்தம் கொடுத்துள்ளார். ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டதுபோல் நிதியை விரைவாக ஒதுக்க வேண்டும் என்று முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.

மூன்றாவதாக, தமிழ்நாடு மீனவர்கள் சந்திக்கும் வாழ்வாதார பிரச்சினை குறித்தும், அதற்கு ஒன்றிய அரசு தீர்வு காண வேண்டியது குறித்தும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்று கோரிக்கைகளை முதல்வர் நேரில் வலியுறுத்திவிட்டு, திரும்பியுள்ளார்.

அரசியலில் என்னதான் கருத்து வேறுபாடு இருந்தாலும், மாநில உரிமை, மக்கள் நலன் என வரும்போது அதை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது என்பதில் தமிழ்நாடு முதல்வர் தெளிவாக இருக்கிறார். இதில், அரசியல் நாகரிகத்தை அடிபிசகாமல் கடைபிடித்து வருகிறார். அதாவது, மாநில திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவேண்டியது ஒன்றிய அரசின் கடமை. அதை, கேட்கவேண்டியது எனது உரிமை. அரசியலை பொறுத்தவரை எதிர் எதிர் துருவமாக இருந்தாலும், கேட்க வேண்டிய நபரிடம், நேரிலேயே கேட்டுவிட்டு வந்துவிடுவதே சிறப்பு என செய்து காட்டியுள்ளார். இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. அதற்குள் நிலுவையில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும் என்பது முதல்வரின் கனவாக உள்ளது. நிதி சிக்கல் தீர்ந்தால் மட்டுமே, நிலுவையில் உள்ள திட்டப்பணிகள் நிறைவேறும். அதன் அடிப்படையிலேயே, இந்த சந்திப்பு நடந்துள்ளது. "தமிழ்நாட்டு மக்கள் நலன் காக்க தேவையான இந்த 3 கோரிக்கைகளை பிரதமர் நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன். இந்த சந்திப்பு மன நிறைவு தருகிறது. இந்த சந்திப்பை பயனுள்ளதாக மாற்ற வேண்டியது பிரதமரின் கையில்தான் உள்ளது" என்று தனது பேட்டியில் கூறியுள்ளார்.

எதிரணியில் இருப்பவர் பிரதமராக இருப்பதால், அவரை சந்திக்க வேண்டிய அவசியமில்லை, அவரிடம் கோரிக்கை மனு அளிக்க வேண்டிய தேவையும் இல்லை என இதற்கு முன் பிருந்த சில முதல்வர்கள் போல் அல்லாமல், முதல்வர் மு.க.ஸ்டாலின், தனது தெளிவான பாதையை அரசியல் உலகிற்கு காட்டியுள்ளார். இதே மனப்பான்மையுடன், தேச ஒருமைப்பாடு, மாநில வளர்ச்சி என்பதை கருத்தில்கொண்டு, பிரதமரும் செயல்பட்டால் ஜனநாயக மாண்பு காக்கப்படும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களில் வலம் வருவது!



வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக்கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன் படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண் பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் , 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல் நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியல் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6,மற்றும் 6பி,7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களில் சேர்க்கலாம்.

பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்க வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய10 அல்லது12ஆம்வகுப்புசான்றிதழ், கடவுச்சீட்டுஆகியவற்றைஅளிக்கலாம். 25வயதுக்குகீழ்உள்ளவிண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்காக இணைய தள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி (voter helpline mobile app) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப் பணிகளில் கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அந்தந்த வாக்குச்சாவடி நிலைமுகவர்களுடன் (BLA-2) இணைந்து மேற்கண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் சி.வெ.கணேசன்
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மா.பா.சா.பன்னீர்செல்வம்

செப்டம்பர் 29 (2014)

கழக முன்னோடிகளில் ஒருவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த மா.பா.சாரதி அவர்களின் மகன். தலைமை செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், கூட்டுறவு கட்டிட சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இரண்டுமுறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே. முனியசாமி

செப்டம்பர் 29 (2009)

இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.